அபிராமி அந்தாதி
ஆய்வுரை
44, 45 வது பாடல்கள்

இப்பாடல்களின் பயன்:

நம்பினவரை நம்பித் தொழும் யாவரும்
துன்பங்கள் யாவும் நீங்கி இன்பமாக வாழுவர்.

வெளியீடு:
பஜனைச் சபை,
வடக்கம்பலை, கரியம்.
1994

எமக்கு அப்பாள் உதவிய அன்பர்கள்

வழக்கம்பரை அப்பாள் ஆலயத்தில் தினமும் மாலை வேளையில் அபிராமியந்தாதி பாடல்களை படித்து இன்புறும் அன்பர் சித்தன்கேணியைச் சேர்ந்த திரு எம். கே. சிவசுப்பிரமணியம் அவர்களுடன் நாமும் சேர்ந்து அம்பாளை வணங்கி வருகின்றோம்.

அன்பர் பாடல்களைப் படிக்கும் போது இனிமையாகவும் சுவையாகவும் இருக்கின்றது. எங்களால் வெளியிடப்படும் அபிராமி அந்தாதி வெளியீட்டுக்கும் துணையாக இருந்து வரும் திரு எம். கே. சிவசுப்பிரமணியம் அவர்களின் சேவையை பாராட்டுகின்றோம். நன்றி கூறுகின்றோம்:

அபிராமியந்தாதி நூறு பாடல்கள் ஆய்வுரையை வெளியிட அம்பாள் பலரை எமக்கு உதவுவா என்று நம்புகின்றோம் பாடல் வெளியாகிய ஞானசம்பந்தம் இதழ் கிடைப்பதில் சில தாமதம் ஏற்பட்டாலும் இவற்றை எமக்கு கிடைக்கச் செய்வதில் பலர் அரும் பாடு பட்டு வருகின்றனர். யாவருக்கும் நன்றி.

காரைநகரைச் சேர்ந்த உயர் திரு. எம். சின்னத்துரை தற்போது சுழிபுரத்தில் வாழ்ந்து வருகின்றார். எங்கள் வெளியீடுகளை வாசித்து சுவைத்து தாமும் ஓர் பாடலை வெளியிட வேண்டும் என்ற ஆசையுடன் வந்து உதவி செய்துள்ளார். இவர் தமது குடும்பத்தினருடன் வழக்கம்பரை அம்பாளை வணங்கி பக்தி செய்து வருகின்றார். கூட்டுப்பிராத்தனையிலும் பங்குபற்றி பாடல்களை படித்து இன்புறுகின்றார். எமது மூன்றைய வெளியீட்டு வைபவங்களில் தனது மனைவியாருடன் கலந்து சிறப்பித்து பெருமையுறுவதை நாம் அறிவோம்; நல்ல பண்புப் அடக்கமும் நிறைந்த திரு. எம். சின்னத்துரை தமது மனைவி பிள்ளைகளுடன் எல்லா நலங்களும் பெற்று வாழ அம்பிகை அருள் நல்குவாரி என்ற வேண்டுதலுடன் எங்கள் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்களிடம் அபிராமியந்தாதி நூறு பாடல்கள் கொண்ட நூல் அபிராமிப் பதிகம் ஒன்று இரண்டு பாகம் ஆகிய நூல்கள் தேவையானவர்கள் பெற்றுக்கொள்ளலாம். அடுத்த வெளியீட்டில் சந்திப்போம்.

01-05.1994

"ஞானச் சுடரோன்"

உ

சிவமயம்

அபிராமியந்தாதி ஆய்வுரை

44 வது செய்யுள்

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்(கு) அன்னையும் ஆகினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும் ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண்டாகமெய்த் தொண்டு
செய்தே.

சிவபெருமானுடைய வாம பாகத்தில் இருந்தவள் என்று அம் பிகையைத் துதித்த அபிராமிப்பட்டர் அவனுக்கும் அவளுக்கும் உள்ள உறவை எண்ணிப்பார்க்கிறார். அந்த உறவு மிகவும் விசித்திரமானது. ஒரு சமயம் அவனை அடைய அவள் தவம் செய்கிறாள். மற்றொரு சமயம் அவளை அடைய அவன் தவம் செய்கிறான் அவனுடைய திரு மேனியில் சரிபாதியை ஆக்கிரமித்துக் கொண்டு முழு உரிமையோடு சமானமாக எழுந்தருளியிருக்கிறாள். வேறு சமயத்தில் அவளே தலைவியாக இருக்க அவன் அவளுக்கு அடியவனாக இருக்கிறான். வணங்குகிறான். சில சமயங்களில் அவனுக்கு அடங்கிய நாயகியாக பணிந்தொழுகும் பத்தினியாக, அவள் விளங்குகிறாள் இவ்வா றெல்லாம் நாடகம் நடித்தாலும் அவர்கள் இருவரும் ஒருவரே, சிவன் வேறு சத்தி வேறு அல்லர்

இந்த விசித்திரமான உறவை நினைத்து வேறு ஒரு வகையில் அதனைச் சொல்கிறார்.

இந்த ஆசிரியர் அம்பிகையைத் தம்முடைய உள்ள மாகிய சிங்காதனத்தில் இருத்திக்கொண்டவர். தமக்கு நெருங்கிய தனை யாகப் பெற்றவர். வேதம் கூட அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் சேய்மைச் சுட்டாகக் கடவுளைச் சொல்கிறது. பக்தர்களோ இறைவனுடன் நெருங்கி அருளநுபவத்தில் இணைந்தவர்களாதலின் அண்மைச் சுட்டினால் இவன் என்று சொல்வார்கள். திருஞானசம் பந்தர்

"பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான்
இவன் அன்றே"

என்று பாடுகிறார். அபிராமி பட்டரும் உள்ளத்தினால் அம்பிகையின் அணுக்கத் தொண்டராகும் பேறு பெற்றமையால் அன்னையை அணிமைச் சுட்டினாள் 'இவள்' என்கிறார் என்னுடைய உள்ளத்திற்கு அணிமையில் எழுந்தருளி என் தியானப் பொருளாக நின்றருளும் பிராட்டி என்று பொருள் கொள்ள வேண்டும். என்னுடைய தாயாகிய இவள் இப்படியெல்லாம் எம்பிரானுடன் இணைந்த உறவுடையவள் என்று சொல்ல வருகிறார் 'இந்தப் பிராட்டி உமாதேவியாகத் தனியே பிரிந்திருந்து பரமேசுவரனை அடைய வேண்டுமென்று இமாசலத்தில் தவம் இருந்தவள்' என்று தொடங்குகிறார். விரிவாகச் சொல்லாமல் சுருக்கமாகத் தவம் செய்தவள் என்கிறார்.

தவளோ இவள்

''மாத்தவளே'' என்று 13 - ஆம் பாடலிலும் சொன்னார் தனியே இமவான் மகளாகப் பிறந்து சிவபெருமானை அடைய வேண்டும் என்ற பேரார்வத்தினால் அதன் பொருட்டு மகாயோகினியாகிப் பொறி புலன்களை அடக்கித் தவம் செய்தாள் அதன் பயனாகப் பரமேசுவரனை மணந்தாள் அவனுடைய மனைக்கு மங்கலமாக அவனுடைய வாழ்க்கைக்கு உறுதுணையாக ஆனாள் எல்லோருக்கும் இன்பத்தை உண்டாக்கும் சிவபெருமானுடைய வாழ்க்கையில் மங்கலத்தை உண்டாக்கினாள். சிவம் என்ற சொல்லுக்கே மங்கலம் என்ற பொருள் உண்டு. அம்பிகையைப் பிரிந்திருந்தால் அந்த வாழ்வில் மங்கலம் இராது அவளோடு சேர்ந்திருந்தால்தான் அவன் மங்கலமூர்த்தாகும்; அவன் மனைமங்கலமாக இருப்பவள் அன்னை.

எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம் அவளே; ''மங்கலம் என்ப மனைமாட்சி'' என்பது திருக்குறள் இல்லறம் செய்பவனுக்கு மனைவியினால் வரும் மாட்சியே மங்கலம். இங்கே மாண்புடைய பத்தினியாக அம்பிகை இருந்தலின் சங்கரனாருடைய மனைக்கு அவள் மங்கலமாயினாள் லலிதா சகஸ்ரநாமத்தில் மங்கலாகிருதி சுமங்கலி என்ற திருநாமங்கள் வருவது இங்கே நினைப்பதற்குரியது ''மழுவார் திரு நெடுமங்கை மகளே'' என்பது தக்கயாகப்பரணி.

அம்பிகையின் பக்தராகிய இவர் அம்பிகையின் கணவனாகிய சங்கரனை, 'எங்கள் சங்கரனார்' என்று உரிமையுடன் சொல்கிறார்.

சிவபெருமனை மணக்க வேண்டுமென்று தவம் புரிந்து அப்பெருமானுடைய மனைக்கு மங்கலமாகிய துணைவியாக எழுந்தருளியிருக்கும் அவள் அவனுக்குத் தாயாகவும் இருக்கிறளாம் இது உலகத்

தில் இல்லாத அதிசயம் இதையே வேறு விதமாகச் சொல்வார் மணி வாசகர் சிவபெருமான் அம்பிகைக்கு மணாளனாகவும் இருக்கிறானாம் மகனாகவும் இருக்கிறானாம்

''இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன்'' என்று திருவாசகத்திலும் (பொற் சுண்ணம் 13)'' தவளத்த நீறணி யும்தடம் தோளத்தண்ணல் தன்னொருபால் அவள் அத்த னாம்மக னாம்இல்லை யான்'' என்று திருச்சிற்றம்பலக் கோவையிலும் பாடுகிறார். குமர குருபரரோ,

''தனிமுதல் யாம் என்பாரிக் கம்மனை யாய்அவர்
தம்மனை யானவள்''

என்று மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் (அம்மானை 9)
''அனக நாட கற்கெம் மன்னை, மனைவி தாய்''

என்று சிதம்பரச் செய்யுட் கோவையிலும்(33)பாடுகிறார் சிவஞான சித்தியார் சக்தியான் சிவத்தை யீன்றும் என்று கூறுகிறது, தத்துவங்கள் ஒன்றினின்று ஒன்று தோன்றும் முறையில் இந்த உறவு தெளியப் பெறும். சிவ தத்துவத்தினின்றும் சக்தி தத்துவம் தோன்றுகிறது. அப்போது சிவனுக்குச் சக்தி மகள் முறை ஆகிறான். மீண்டும் அந்தச் சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுகிறது. சக்திக்கு சதாசிவம் மகனாகிறான் இந்தத் தொடர்பை எண்ணியே இங்கே, 'அவர் தமக்கு அன்னையும் ஆயினாள்' என்றார்.

தவளே இவள்; எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள்.

எல்லாரினும் சிறந்தவனும் பெருந்தலைவனுமாக இருப்பவன் பரம சிவன் அவன் தேவர் கோ அறியாத தேவதேவன்; மகாதேவன் அவ னுக்கும் அன்னையாகும் நிலையில் அபிராமி இருக்கிறாள் அவளைப் பராபிகை யென்றும் பரதேவதை யென்றும் சொல்வார்கள் எல் லாரினும் உயர்ந்த தெய்வம் பரமேசுவரன். அவனுக்கும் மேலானவள் அம்பிகையென்றால் அவளினும் சிறந்தவர் யாரும் இல்லை என்பது புலனாகும் எல்லாத் தேவர்களுக்கும் மேலாக, யாவரையும் தன் கீழ் இருக்கச் செய்து உயர்ந்து நிற்கிறவள் இந்தப் பெருமாட்டியே!

ஆகையினால் இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை
இறையும் ஆம்

இத்தகைய பரதேவதையை உபாசனை புரிந்து அவளுடைய அருளைப் பெற்றவர்களுக்கு மற்றவர்கள் எம்மாத்திரம்? மற்றத் தெய்வங்கள் தமக்கு ஏதேனும் ஒரு குறை உண்டானால் வாடி வருந்தித் தம்மினும் உயர்ந்த தெய்வத்தை நாடி அடைந்து துணை வேண்டும். அவர்களே குறையுடையவர்களென்றால் அவர்களை அண்டுபவர்களுக்கு எவ்வாறு குறை தீரும்? தாங்கள் பற்றிக் கொண்ட பற்றுக் கோடே தளருமானால் அவர்களும் தளர வேண்டியதுதானே?

எனவே எதனாலும் தளராத நிலை வர வேண்டுமானால் எதற்கும் தளராமல் எல்லாருடைய தளர்ச்சியையும் போக்கும் ஒரு வரை அடைய வேண்டும். அப்படி உள்ள தலைவி அம்பிகை அவளைப் புகலாகப் புகுந்து அவளுடைய அருளைப் பெற்றவர்களுக்கு மற்றத் தெய்வங்களை நாடவேண்டிய அவசியம் இல்லை. அம்பிகையை விட வேறுதெய்வம் இல்லை என்பதை உணர்ந்தவர் அபிராமிபட்டர் தம் முடைய தொண்டுகளையெல்லாம் அவளுக்கே அர்ப்பணம் செய்தவர். சிவபிரானுக்கே அன்னையாக நிற்கும் பரமேசுவரியைப் பற்றிக் கொண்ட பிறகு வேறு யாருக்குத் தொண்டு செய்வது? அப்படித் தொண்டு செய்தால் அவர்கள் தளர்ச்சி அடையும் போது அவரும் தளர வேண்டியிருக்குமே! ஆகவே அவர், எவர்க்கும் மேலான தெய்வமாகிய உன்னைப் புகலாக அடைந்து உன் திருவடிக்குத் தொண்டு செய்யும் அடியேன் வேறு ஒரு தெய்வம் இருப்பதாக எண்ணி ஏமாந்து போக மாட்டேன்: அவ்வாறு எண்ணி வழிபாடு செய்தல் முதலிய தொண்டுகளை மெய்யினால் செய்யமாட்டேன்; அப்படிச் செய்வதானால் அவர் காளல் எமக்கு வரும் துன்பத்தை நீக்க முடியாது என்பதை அறிந்து நான் தளர்ச்சி அடைய மாட்டேன் என்று உறுதியாகச் சொல்கிறார்.

நுவலேன் இனி ஒரு தெய்வம் உண்டாக
மெய்த் தொண்டு செய்தே.

முன்பும் ஒரு பாடலில் ''மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே''? (13) என்று பாடினார்.

மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களினாலும் இறைவியையே தியானித்து வாழ்த்தித் தொண்டு புரிகிறவர் இந்தப் பக்தர், தனி உரிமையாக அம்பிகையே அவற்றைப் பெற்றிருக்கிறாள். அப்படி இருக்கையில் பெய்யினால் செய்யும் தொண்டை வேறு ஒரு வரைத் தெய்வமென்று கருதி அர்ப்பணம் செய்வாரா? அப்படிச் செய்தால் அதனால் தளர்ச்சி தான் உண்டாகும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

இப்பாடலின் பயன்; நம்பிக்கை வீண்போகாது நம்புங்கள் அம்பிகையை.

நன்றி: மாலை பூண்டமலர்

சிவமயம்

அபிராமியந்தாதி ஆய்வுரை

45 வது செய்யுள்

ஆய்வுரை : புலவர் கே. சந்தானராமன் M. A.

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றி செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே, பின் வெறுக்கை
யன்றே!

அ. தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே பண்டு செய்தார் உளரோ? இலரோ?

1. தினக்குத் தொண்டு புரியாமலும் நின் திருவடியினை வணங்காமலும் தமக்குத் தோன்றிய வழியினையே ''தன்று'' என்று. துணிந்து முற்காலத்தில் சில அடியார்கள் வழிபட்டிருக்கலாம் அதனை யான் அறியேன்.

2. ''உளரோ இலரோ'' என்பது ''அப்படித் துணிந்து இச்சையே செய்தார்களோ இல்லையோ''? என்ற பொருளில் அவர்களது செயலைக் குறித்து நின்றது. பின் கண்டு செய்தல் என்று வருவதால் அவர்களது செயல்களையே குறித்தது என்பது தெளிவாகிறது. ''இலர்'' எனில் அதனைக் கண்டு செய்யும் பேச்சே இல்லையாகும்.

3. அதாவது முன் காலத்தில் சில அடியார்கள் வேதாகம நெறிகளைப் பின் பற்றாது அல்லது தொன்று தொட்டு பின் பற்றப் படும். 'தாத்ரீக' நெறிகளையும் பின்பற்றாது தமது விருப்பப்படி வழிபட்டு இறையருள் பெற்றதாக வரலாறுகள் உண்டு. அவர்களது தூய அன்பின் காரணமாகவும், உறுதிப்பாட்டின் காரணமாகவும் முன்வினைத் தொடர்பு காரணமாகவும், அருளுக்குரிய பக்குவப் பெற்றுத் தமது இலக்கினை அடைந்து விடுகின்றனர் அவ்வரலாறுகளே பண்டு துணிந்து இச்சையே செய்த செயல்கள் ஆகும்.

4 'சவ்ய — அபசவ்ய — மார்கஸ்தர்' என்பது சகஸ்ரநாமத்தில் ஒன்று அதாவது வலத்திலும் இடத்திலும் வழியிலும் இருப்பவள் என்றும் வலது சாரி மற்றும் இடது சாரி மார்க்கங்களில் இருப்பவள் எனவும் குறிப்பிடுகிறது இந்த நாமம்

வேதாகம நெறிப்படி வழிபடும் முறை 'சவ்ய' மார்க்கம் ஆகும் சிவகோசரியார் இயற்றிய சிவபூஜை சவ்ய மார்க்கம் தாந்ரீகமாகவும் தன்னிச்சைப் படியும் செய்யும் பூஜை அபசவ்யம் ஆகும். அதாவது 'சவ்யம்' அல்லாதது வேதாகம மார்க்கத்தைச் சாராதது என்பது பொருள் சண்ணப்பரின் வழிபாடு இத்தகையது இரண்டுமே இறைவனுக்குஉகந்தது தான்.

5. வேதாகம சாஸ்த்திரங்கள் எதனையும் அறியாத காளிதாசன் பண்டு துணிந்து இச்சையே செய்தவன் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும். ஆயினும் அவனது உறுதிப்பாடும் அசையாத நம்பிக்கையும் அன்னையின் அருளுக்குப் பாத்திரமாக்கியது.

6. காளிதாசனின் மறுபிறவி என்று கருதப்படும் காஞ்சி முககவி வேதநெறி அறியாது இச்சையே செய்திருந்து பின்னர் காமாட்சியின் அருள் பெற்றான்.

7. அன்னையினை வழிபடக் கடினமான முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சிலர் தவறாகக் கூறுவர் அவளது திருமந்திரத்தினை ஒதி 'நியமங்கள்' பலவற்றையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் அவ்வாறு செய்யத் தவறினால் குலம் அழியும் குருதி வடியும் என்றும் அச்சுறுத்துவர்.

ஆனால் அப்படி எதுவும் நிகழாது என்று தேவி பாகவதம் தெளிவாக விளக்குகின்றது.

மனோரமை என்னும் மகாராணி தனது கணவனை இழந்து பின் அவனது இரண்டாம் மனைவியால் நாடு கடத்தப்பட்டு விடுகிறாள். மனோரமையின் மகன் சுதர்சனன் என்பவன் தன் தாயுடன் காட்டில் வாழ்கின்றான். அவனுடன் விளையாடும் சிறுவர்களில் ஒருவன் ''அலி'' அவனை அனைவரும் க்லீபன் என்று அழைப்பர். சுதர்சனனும் அவனை அடிக்கடி க்லீபன் என்றே அழைப்பான். அப்பெயரில் ஏதோ ஈடுபாடு ஏற்பட்டு விட்டது எப்போதும் க்லீபன் க்லீபன், என்றே சொல்லி வரலானான் முடிவு: அவனுக்கு அன்னையின் அருள் கிட்டி விட்டது.

ஆம் சுதர்சனன் அவளது பீஜாட்சரமாகிய க்லீம் என்பதனை பலமுறை ஜபித்து விட்டான் என்று கருதி அவனை தக்க இளவரசி

யுடன் இணைத்து மணம் முடித்து வைத்து இழந்த நாட்டினையும் மீட்க அருள் பாலித்து விட்டாள் உபதேசம் நியதி ஏதுமின்றி தொண்டு செய்யாது அவள் பாதம் தொழாது துணிந்து இச்சையே செய்த இள வரசன் பெற்ற பகீசினை தேவி பாகவதம் புகழ்ந்து பேசுகிறது அவள் அடியார் எம்முறையினைப் பின்பற்றினாலும் அருள் பாலிக்கிறாள்.

8. 'பண்டு துணிந்து இச்சையே செய்தார்' என்பது மனம் போன போக்கில் நடந்து இறைவனை மறந்துவிடும் மனிதர்களைக் குறிக்க வில்லை உலக இயல்புக்கு மாறாகவும் நெறி முறைகளுக்கு மாறாகவும் முற்காலத்தில் வழிபட்ட சில அடியார்களையே! குறிக் கிறது என்பது தெளிவு.

ஆ. அப்பரிசு அடியேன் கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?

1. அவ்வடியார்களின் இயல்புகளை யான் கண்டு பின்பற்றி அதனையே செய்தால் அது வஞ்சனையாகுமா? (தாழ்வான தவநெறியாகுமா?) அல்லது உயர்ந்த தவநெறியாகுமா? அதனையும் அறியேன்.

2. பாதகத்துக்குப் பரிசு பெற்ற சண்டேசுவர நாயனார் வரலாற் றினைக் கருத்திற் கொண்டு இங்கு பரிசு என்பதற்கு சிறப்புப் பெறல் எனப் பொருள் கொள்ளலாம். அவ்வடியார் கண்ட சிறப்பினை யானும் கண்டு அதனைப் பெற எண்ணி அம்முறை யினையே யானும் பின் பற்றினால் அது கைதவமா? அல்லது செய்தவமா? என அறியேன் என்கிறார்.

3. முற்காலத்தில் காளிதாசன் போஜ ராஜனிடம் அமாவாசையினைப் பௌர்ணமி என்று கூறிப் பின் அதனை மெய்ப்பித்தான் வேலூ ரில் வாழ்ந்த இரத்னகேடு திட்சிதர் என்ற தேவி உபாசகர் சின் னப் பொம்மன் என்ற மன்னனிடம் அவ்வாறே அமாவசையினைப் பௌர்ணமி என்று கூறிப் பின் அன்னையின் திருவருளை வேண்டி நிலவினை அழைத்துக் காட்டிய வரலாறும் முன்னமே நினைவு கூர்ந்தோம். பண்டு நிகழ்ந்த அப்பரிசினையே யானும் கண்டு இச்சரபோஜி மன்னனிடம் அவ்வாறு கூறியிருப்பின் அது செய் தவமா? அல்லது கைதவமா? அறியேன் என்கிறார்.

4. கண்டு செய்யும் அச்செயல்கள் கால - தேச வர்த்தமானங்களுக்கு ஏற்பவும் ஒருவரது பூர்வஜென்ம புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப வுமே கைதவமாகவும் செய்தவமாகவும் அமையுமாதலால் கை தவமோ அன்றிச் செய்தவமோ என்றார். சில அடியார்களைப்

போல் நடக்க வேண்டும் என்று தோன்றுகின்ற எண்ணமே முன் செய்த புண்ணிய வசத்தினால் தோன்று மாதலால் செய்தவமோ? என்றார். அவர் செய்தி ருக்கிறாரே? நான் ஏன் செய்யக் கூடாது? என்று விதண்டாவாதத்துக்காகப் பின் பற்றுதல் பிழையாகவின் கைதவமோ என்றார்.

5. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பினைக் கண்டு செய்தால் அது செய்தவம் எனத் தகும் வேத சாஸ்திரங்களை அறிந்தவர் திரு முறைகளைக் கற்றவர் ஒருவர் கண்ணப்பர் போல் எச்சில் உண வினைப் படைப்பேன் என்றால் அது விதண்டாவாதம் அல்லது கைதவம்.

6. நமது வழிபாட்டு முறை சிறந்ததா அல்லது தாழ்ந்ததா என்பதை தீர்மானித்து அருள்வது நாம் வழிபடும் கடவுளின் வேலை நாமா கப் பறை சாற்றுவது உகந்ததல்ல என்பதால் கைதவமோ அன்றிச் செய்தவமோ என்று வினாலாக விடுக்கிறார்.

7. இங்கு இரண்டு கருத்துக்களை நாம் தெளிவாக உணர்தல் வேண்டும். முற்காலத்தில் சில அடியார்கள் செய்தனவற்றை நமது கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்பவே பின்பற்ற வேண் டும். ஐயம் ஏற்படும் பொழுது தக்க ஞானாசிரியர் மூலம் தெளிவு பெறுதல் வேண்டும் மற்றொன்று பிற அடியார்களின் வழிபாட்டு முறையினைக் குறை கூறுதலையும் தவிர்க்க வேண்டும். அவற்றிற் தகுதியினையும் தரத்தினையும் தீர்மானம் செய்வது இறைவனின் திருவுள்ளமே யாகும்.

இ. மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே: பின் வெறுக்கை அன்றே!

1. அவ்வாறு நான் நெறிக்குமாறான செயல்களைச் செய்தாலும் நீ தமியேனை வெறுக்காது பொறுத்துக் காக்க வேண்டியது நன்றா கும்.

2. மேற்கண்டவாறு சில அடியார்களின் செயல்களைக் கண்டு பின் பற்றும் பொழுது ஏற்படும் தவறுகளைப் பொறுக்க வேண்டியது உன் கடமை ஏனெனின் நான் உன்னிடம் அடைக்கலமாகப் புகுந்து விட்டேன் அவ்வாறு அடைக்கலம் புகுந்த பின் வெறுக் கும் தகைமைகள் செய்தவர்களை இறைவன் காத்த வரலாற்றினை அடுத்த பாட்டில் எடுத்துரைக்கிறார்.

5. அபிராமிப்பட்டர் 'பரஆகம பத்தரி' யினையே என்றும் பண்ணினார் எனக் கண்டோம் வேதஞ் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு என்பார் பின்பும் அப்படியிருக்க அவர் என்ன பிண்டு செய்தார்? விதிக்கு மாறானவற்றைச் செய்தார்?

திருக்கோயில்களில் குறித்த நேரத்தில் ஆகம விதிப்படி சோடச உபசாரங்களுடன் சிறப்பாக பூஜை நடைபெறுகிறது. நிறைவாக சிவாச்சாரியார் கற்பூரம் தீபாராதனை காட்டு மூன்பு காலலோபம் நியமலோபம், சிரத்தாலோபம் திரவ்யலோபம். பந்த்ரலோபம் முதலிய குறைபாடுகளைப் பொறுத்து நெறியான முறையான பூஜையாக ஏற்றுக்கொள்ள வேண்டியது என்று வேண்டுகிறார் நமது பூஜையினை நாமே சிறப்பித்து பேசி அதனால் ஆணவம் எய்தாதிருக்கவும் அறியாமல் நிகழ்ந்து விட்ட குறைகளைப் பொறுக்க வேண்டியுமே அங்ஙனம் முறையான பூஜை முடிவிலும் வேண்டப்படுகிறது. அவ்வாறே அபிராமிப்பட்டரும் முறையாக வழிப்பட்டவரே ஆயினும் அறியாமல் நிகழ்ந்து விடும் குறை நீங்கவே இவ்வாறு வேண்டுகிறார். இதுவே பராகம பத்ததியின் ஓர் அம்சமாகின்றது. தெய்வ வழிபாடு, குருவழிபாடு, பித்ருவழிபாடு ஆகியவற்றில் ஏற்பட்ட குறைகள் நீங்குதல் இப் பாடலின் பாராயண பலன் ஆகும்.

வாழ்வில் வெற்றிபெற ஐந்து கட்டளை

★ சுறுசுறுப்பாயிரு ★ பொறுமையாயிரு

★ சிக்கனமாயிரு ★ அன்பாயிரு

★ நல்லோரை நாடு